**மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர் : திருந்து. முத்துவடிவேலு**

ப.மு. அ3 /223/2022 நாள்: 31-05-2024.

| | |
|---|---|
| பொருள் : | பொதுப்பணிகள் தமிழ்நாடு அமைச்சுப்பணி - மயிலாடுதுறை மாவட்ட வருவாய் அலகு - **திருமதி.பா.துர்க்காதேவி க.பெ. பாஸ்கரன்** - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது. |
| பார்வை : | 1. மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) செயல்முறைகள்.ந.க.223/2022/அ3, நாள். 22-07-2022.<br>2. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ-1) துறை, நாள்:08.03.2023.<br>3. அரசுக் கடித எண்.5532/G2/2023, மனிதவள மேலாண்மைத்(G) துறை, நாள்:20.09.2023<br>4. அரசுக் கடிதம் 1D எண்.850, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள்:08.12.2023<br>5. அரசுக் கடிதம் (1D) எண்.900, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள்:26.12.2023<br>6. அரசுக் கடிதம் (1D) எண்.13, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பணி-9(2) பிரிவு, நாள்:18.01.2024<br>7. அரசுக் கடிதம் (1D) எண்.64, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள்:18.01.2024<br>8. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் கடித எண்.ஆ.கு.3/4600/2024. நாள்: 20.02.2024 |

@@@

**ஆணை :**

மயிலாடுதுறை மாவட்ட வருவாய் அலகில், சீர்காழி வட்டம், 44.திருக்கருக்காவூர் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலராக பணிபுரிந்து பணியிடையே **30.09.2021** அன்று காலஞ்சென்ற திரு.கோ.பாஸ்கரன் என்பவரின் மனைவி திருமதி.பா.துர்காதேவி என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி **30.12.2021** அன்று மனு அளித்துள்ளார். தனியரது மனு அரசு ஊழியர் இறந்த **மூன்று ஆண்டுகளுக்குள்** கிடைக்கப்பெற்றுள்ளது. தனியர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கிட கோரி மனு அளித்துள்ள நாளில் தனியரின் **வயது 36** வருடங்கள் 22 நாட்கள் ஆகும். தனியர் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் உரிய கல்வித் தகுதியான **<u>பத்தாம் வகுப்பு தேர்ச்சி</u>** பெற்றுள்ளார்.

மேலும், சீர்காழி வருவாய் வட்டாட்சியரின் ஒருங்கிணைந்த சான்றிதழ் எண். முமு5427/2021/ஆ3, நாள்.21.12.2021-இல், காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.கோ.பாஸ்கரன் என்பவரின் குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரியவில்லை எனவும், மேலும் அரசு ஊழியரின் இறப்பிற்கு பிறகு அவரது மனைவி திருமதி.பா.துர்க்காதேவி மறுமணம் ஏதும் செய்துகொள்ளவில்லை எனவும், மேலும், இறந்தவரின் குடும்பத்திற்கு அவரது ஊதியத்தினை தவிர அவரது தாயார் திருமதி.மல்லிகா என்பவர் குடும்ப ஓய்வூதியம் மூலம் ஆண்டு வருமானம் ரூ.1,50,384/- பெற்று வருகிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து தனியருக்கு பார்வை-(1)-இல் காணும் செயல்முறை ஆணையின்படி இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் **25-07-2022 முற்பகல்** முதல் பணியேற்று, தற்போது சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார்.

எனவே, மயிலாடுதுறை மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.பா.துர்க்காதேவி என்பவருக்கு உரிய கல்வி, வயது மற்றும் வறியநிலைத் தகுதிகளின் அடிப்படையிலேயே பார்வை-(1)-இல் காணும் செயல்முறை ஆணையின்படி இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளதால், **பார்வை (2)** -இல் காணும் அரசாணை, **பார்வை (3)**-இல் காணும் அரசு, மனிதவள மேலாண்மைத்துறையின் கடிதத்தில் உள்ள வழிகாட்டுதல்கள் மற்றும் **பார்வை (4) முதல் (8) வரை** காணும் அரசுக்கடிதங்களில் வழங்கப்பட்டுள்ள தெளிவுரைகள் ஆகியவற்றின் அடிப்படையில் தனியரின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் தனியர் பணியில் சேர்ந்த நாளான **25-07-2022 முற்பகல்** முதல் பணிவரன் முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இவ்வாணையினை தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு தொடர்புடைய கட்டுப்பாட்டு அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
மயிலாடுதுறை.

<u>பெறுநர்</u>
திருமதி.பா.துர்க்காதேவி,

இளநிலை வருவாய் ஆய்வாளர்,
வருவாய் கோட்ட அலுவலகம்,
சீர்காழி. ( உரிய அலுவலர் மூலமாக)

**நகல் :**

1. கூடுதல் தலைமைச் செயலர், வருவாய் நிருவாக ஆணையர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்படுகிறது.
2. வருவாய் கோட்டாட்சியர், சீர்காழி
3. இருப்பு கோப்புக்கு.